<u>பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்</u>

<u>மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை-6, அவர்களின்</u>

<u>செயல்முறை ஆணை</u>

<u>பிறப்பிப்பவர் : மரு.எஸ்.குருநாதன், எம்எஸ்., (ஜிஎஸ்),</u>

ந.க.எண்.76953/நிபி8/1/2021 நாள்: 10.01.2022

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.உ.ஹரிஹரமுருகன், (த/பெ. (லேட்) திரு.உத்திரகுமாரன், ஆண்செவிலிய உதவியாளர், அரசு மருத்துவமனை, இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்) – கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலைஉதவியாளர் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2. அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.06.1995.
3. அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007.
4. அரசாணை (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 08.10.2007.
5. இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.66576/நிபி8/1/2019, நாள் 28.11.2019.
6. இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.72853/நி2/2/2019-4, நாள் 29.11.2019.
7. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.02.2021.
8. அரசு கடித எண்.8755/ஏடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 16.03.2021.
9. திருநெல்வேலி மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலக கடித ந.க.எண்.7643/நிபி3/2021, நாள் 02.09.2021.
10. மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள்.

-------

<u>ஆணை:</u>

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம், அரசு மருத்துவமனையில் ஆண் செவிலிய உதவியாளராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே 19.11.2003 அன்று இயற்கையெய்திய திரு.உத்திரகுமாரன் என்பவர் 25.07.1967 பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 24.07.1968

Scanned with CamScanner

பிற்பகல் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 04.05.1947, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 31.05.2005 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகன் திரு.உ.ஹரிஹரமுருகன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம், அரசு மருத்துவமனையில் ஆண் செவிலிய உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 19.11.2003 அன்று இயற்கையெய்திய திரு.உத்திரகுமாரன் என்பவரின் மகனும் வாரிசுதாரருமாகிய திரு.உ.ஹரிஹரமுருகன் (பிறந்த தேதி 15.05.1979) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர், அரசு மருத்துவமனையில் 09.12.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.உ.ஹரிஹரமுருகன் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-7இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 09.12.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ். குருநாதன்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்

பெறுநர்
திரு.உ.ஹரிஹரமுருகன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவமனை, வீரகேளம்புதூர், திருநெல்வேலி மாவட்டம்.
-- நலப்பணிகள் இணை இயக்குநர், திருநெல்வேலி மூலமாக.

நகல்
1) நலப்பணிகள் இணை இயக்குநர், திருநெல்வேலி (இ) தென்காசி.
2) மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, வீரகேளம்புதூர், திருநெல்வேலி மாவட்டம்.
3) நிர்வாகப்பிரிவு 2 (2 நகல்கள்)
4) நிர்வாகப்பிரிவு 2 (முதுநிலை)
5) இருப்புக்கோப்பு / உபரி -1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இளநிலை நிர்வாக அலுவலர்

Scanned with CamScanner